# சேதுபதி நாச்சியார்களின் தானங்கள்

**சாந்தினி அருளானந்தம்**[1]


## ஆய்வுச்சுருக்கம்:

*இராமநாதபுரத்தை மையமாகக் கொண்டு ஆட்சி செய்தவர்கள் சேதுபதிகளாவர். இவர்கள் அரச சமயமாக இந்துசமயத்தைக் கொண்டிருந்தாலும் சமயப்பொறையுடையவர்களாக ஆட்சி செய்ததுமன்றித் தானங்களையும் வழங்கி வந்துள்ளனர். இத்தானங்கள் பற்றிய செய்திகளைக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும், பல்வேறுபட்ட ஆவணங்களும் அறியத்தருகின்றன. சேதுபதிகளால் பொறிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட செப்பேடுகளில் தானங்கள் பற்றிய செய்திகள் கிடைக்கப்பெறுகின்றன. மன்னர்கள் மட்டுமன்றி அவர்களுடைய அரசிகளான நாச்சியார்களும் பல தானங்களை வழங்கியமையைச் செப்பேடுகள், கல்வெட்டுகள் போன்ற சான்றுகள் வெளிப்படுத்துகின்றன. காதலி நாச்சியார், மங்களேஸ்வரி நாச்சியார் போன்ற இராணிகளின் கொடைகள் பற்றி மேலசீத்தைச் செப்பேடு, களத்தூர்ச் செப்பேடு, நெடிய மாணிக்கம் செப்பேடு ஆகிய மூன்று செப்பேடுகள் அறியத் தருகின்றன. இச்செப்பேடுகளை அடிப்டையாகக் கொண்டு நாச்சியார்களின் சமய ஈடுபாடு, தானத்தின் தன்மைகள் மற்றும் இந்துசமயம் போன்ற விடயங்களை மையப்படுத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவர்களால் வெளியிடப்பட்ட செப்பேடுகளினூடாக இந்துப்பண்பாட்டு வளர்ச்சியில் பெண்களின் வகிபங்கை அறிதல், இந்துப்பண்பாட்டின் பிரதான அம்சங்களை இனங்காணுதல் போன்றன இந்த ஆய்வின் நோக்கங்களாக அமைகின்றன. மேற்படிச் செப்பேடுகளைப் பிரதான மூலங்களாகக் கொண்டு வரலாற்று ஆய்வுமுறையியலின் பின்னணியில் பகுப்பாய்வு செய்வதாக இந்த ஆய்வு அமைகின்றது. சேதுபதி நாச்சியார்களின் இச்செப்பேட்டுத் தானங்கள் சமயப்பணிகளில் அரச பெண்களுக்கு வழங்கப்பட்ட சுகந்திரத்தைப் புலப்படுத்துவதாக அமைவதோடு, இந்துசமயத்தின் பிரதான விடயங்களான கோயில், பிராமணர், மற்றும் சமய நம்பிக்கைகள் போன்ற இன்னோரன்ன விடயங்களைத் தெரியப்படுத்துகின்றன என்பது இவ்வாய்வின் முடிவாக அமைகின்றது. மேலும் தமிழகத்தில் ஆட்சி செய்த பல்வேறுபட்ட வம்சங்களைச் சேர்ந்த அரச பெண்களின் சமயப்பணிகளின் தொடர்ச்சியையும் கண்டுகொள்ள முடிகின்றது.*


**திறவுச்சொற்கள்:** செப்பேடு, பெண்கள், தானம், சேதுபதி, இந்துசமயம்

[1]*வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
*mathushanthini@yahoo.com*

### சேதுபதி நாச்சியார்களின் தானங்கள்

தமிழக வரலாற்றில் சேதுபதிகளின் காலம் அரசியல், பொருளாதார, சமய, பண்பாட்டு அடிப்படையில் முக்கியத்துவமுடைய காலப்பகுதியாக விளங்குகின்றது. நாயக்கர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட நிர்வாகப் பரவலாக்கம் காரணமாக 17ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் இராமநாதபுரத்தை ஆட்சி செய்வதற்கு மறவர்கள் எனப்பட்ட சேதுபதிகள் நியமிக்கப்பட்டனர். நாயக்கர் மரபின் வழியில் கி.பி.1601 – கி.பி.1609 இல் சேதுபதி அரசமரபு தனித்துவமாக உருவாகியது. கிழவன் சேதுபதி என்பவனது தலைமையில் இராமநாதபுரத்தை மையமாகக் கொண்டு உருவாக்கபட்ட அவ்வரசு இந்துசமயத்தை அரசசமயமாகக் கொண்டிருந்தபோதும் இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற சமயங்களைப் பொறையுடன் ஆதரித்தமையை அவர்களது செப்பேடுகள், கல்வெட்டுகள், மற்றும் ஆவணங்களிலிருந்து அறியமுடிகின்றது. சேதுபதி மன்னர்கள் கோயில் மற்றும் தானங்களுக்காக அதிக ஊர்களை வழங்கியவர்கள் ஆவர். அவர்களுடைய இராச்சியத்தில் அரைப்பகுதி அறக்கொடைகளுக்காக வழங்கப்பட்டன. 22 மடங்களுக்கு 41 ஊர்களையும், 39 சத்திரங்களுக்கு 77 ஊர்களையும், தனிப்பட்ட 210 பேருக்கு 219 ஊர்களையும் வழங்கியுள்ளனர் (கமால்,எஸ்.எம்:2008:136). சேதுபதிகளைப் போலவே அவர்களின் அரசிகளும் அறக்கொடைகளை வழங்கியுள்ளனர். இவ் அரசிகள் அரசியல் நடவடிக்கைகளில் மட்டுமன்றிப் பல்வேறு சமய நடவடிக்கைகளிலும் பங்கெடுத்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் இந்துசமயம் சார்ந்த தானங்களையே வழங்கியுள்ளனர். இத்தானங்களை அறிந்து கொள்வதற்கு அந்த அரசிகளால் எழுதுவிக்கப்பட்ட செப்பேடுகளே பெரிதும் துணையாகின்றன. காதலி நாச்சியாரின் மேலச் சீத்தைச் செப்பேடு மற்றும் களத்தூர்ச் செப்பேடு, மங்களேஸ்வரி நாச்சியாரின் நெடியமாணிக்கம் செப்பேடு போன்றன சேதுபதி இராணிகளின் கொடைகளுக்குரிய பிரதான சான்றுகளாக கிடைக்கப்பெறுகின்றன. இவர்களால் வழங்கப்பட்ட தானங்கள் அக்கால இந்துசமயத்தின் பிரதான விடயங்களான தான முறை, கோயில், பிராமணர், மற்றும் இந்து சமய நம்பிக்கைகள் போன்றவற்றை அறிய உதவுகின்றன.

### நாச்சியார்களின் செப்பேடுகள்

செப்புத் தகடுகளில் எழுதப்பட்டவை செப்பேடுகளாகும். பல்வேறு வம்சங்களைச் சேர்ந்தவர்கள் தானங்களை வழங்கியதோடு, அவை பற்றிய விபரங்களைச் செப்பேடுகளாகப் பொறிப்பித்துமுள்ளனர். 17ஆம் மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளில் சேதுபதிகளால் பலநூறு செப்பேடுகள் வெளியிடப்பட்டதாகக் கருதப்படுகின்றது. ஆனால் ஏறக்குறைய நூறு செப்பேடுகளே இதுவரையில் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் காதலி நாச்சியாரின் மேலைச் சீத்தைச் செப்பேடு (உரு.1) (செப்பேடு.இல:41), களத்தூர்ச் செப்பேடு (உரு.2) (செப்பேடு.இல:46), மங்களேஸ்வரி நாச்சியாரின் நெடியமாணிக்கம் செப்பேடு (உரு.3) (செப்பேடு.இல:101) என மூன்று செப்பேடுகளே சேதுபதி இராணிகளின் கொடைகளுக்குரிய

சான்றுகளாக கிடைக்கப்பெறுகின்றன. இவை முறையே 1693, 1709, 1805 ஆண்டுகளில் வெளியிடப்பட்டவையாகும். முதலாவது செப்பேடு 22 வரிகளைக் கொண்டுள்ளது. 52 வரிகளைக் கொண்டதாக இரண்டாவது செப்பேடு கிடைத்துள்ளது. மூன்றாவது செப்பேடு 57 வரிகளையுடையது. பொதுவாக இவை 'ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம்' எனத் தொடங்கினாலும் மூன்றாவது செப்பேடு 'உசுவஸ்ஸ்ரீமன் சாலிவாகன சகாத்தம்' எனத் தொடங்குவதைக் அவதானிக்கலாம்.

நாச்சியார்களின் செப்பேடுகள் அக்கால இலக்கிய நடையைப் பெருமளவுக்குப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்செப்பேடுகள் தமிழ், தெலுங்கு போன்ற மொழிகளில் எழுதப்பட்டுள்ளதோடு, பெருமளவுக்கு கிரந்த எழுத்து இடம்பெற்றிருப்பதுடன் கிரந்தம், சமஸ்கிருதம், தெலுங்கு எனப் பல மொழிச் சொற்கள் கலந்து வந்துள்ள தொடர்களும் பயன்படுத்தப்பட்டுள்ளமையும் எழுத்துப் பிழைகள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இலக்கிய நடை சார்ந்த செய்யுள் அமைப்பும் அதீத வருணனையும் முழுமையான பொருளை விளங்கிக் கொள்ளத் தடையாகவுள்ளன. மேலும் தானங்களை வழங்கி, அதற்குரிய செப்பேடுகளை எழுதுவித்த காதலி நாச்சியார், மங்களேஸ்வரி நாச்சியார் போன்றோரின் விபரங்கள் செப்பேடுகளில் நாலில் ஒரு பாகமாகவே அமைந்துள்ளமையும் கவனிக்கற்பாலது. மிகுதியில் அந் நாச்சியார்களின் கணவன்மாரின் சிறப்புக்கள் அவர்களின் வம்சப் புகழ் என்பன அதிகமாக இடம் பெற்றுள்ளன. இருப்பினும் இந்துப்பண்பாட்டினை நீண்ட காலமாக அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் சுதந்திரமாகவும் பொருளாதார ஆதிக்கத்துடனும் பாதுகாத்து வந்துள்ளனர் என்பதை அச் செப்பேடுகள் புலப்படுத்துகின்றன. பல்லவர் ஆட்சிக் காலம் தொடக்கம் நாயக்கர் ஆட்சிக்காலம் வரைப் பல்வேறு அரசிகள் சமயப் பணிகளை ஆற்றியுள்ளனர். இரங்கபதாகை, செம்பியன் மாதேவி, குந்தவை போன்றவர்களை உதாரணமாகக் கூறலாம். இராமநாதபுரத்தில் தன்னுரிமை பெற்ற ஆட்சியாளராக விளங்கிய சேதுபதிகளின் அரச குடும்பப் பெண்களும் இத்தகைய தொடர்ச்சியைப் பேணி வந்துள்ளமைக்கு இச்செப்பேடுகள் சான்றாகும்.

**நிலத்தானங்கள்**

சேதுபதி நாச்சியார்கள் வழங்கிய தானச் செப்பேடுகள் அவர்களால் வழங்கப்பட்ட கிராமத்தின் பெயராலேயே அழைக்கப்படுகின்றன. இரகுநாத சேதுபதி காத்ததேவராயர் என்ற அரசரின் இரண்டாவது இராணியாகிய காதலி நாச்சியார் மேலைச் சீத்தைக் கிராமத்தின் வருமானங்கள் அனைத்தையும் இராமேஸ்வரம் கோயிலின் பண்டாரத்திடம் கொடுத்ததைக் கூறுகின்றது (செப்பேடு.இல.41). பெரும்பாலும் கோயிலுக்கு வழங்கப்பட்ட தானங்கள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுகள் கோயிலுக்கு வழங்கப்பட்டதாவே கூறுகின்றன. ஆனால் இச்செப்பேடு இராமேஸ்வரத்திலுள்ள சிவன் கோயிலாகிய ராமநாதசுவாமி அறக்கட்டளைக்குத் தர்மமாக

அக்கோயிலின் இராமநாத பண்டாரத்திற்கு (கருவூலத்துக்கு)க் கொடுக்கப்பட்டதைத் தெரிவிக்கின்றது. இக்காலகட்டத்தில் சேதுபதிகளின் பிரதான கோயிலாக விளங்கிய இராமேஸ்வம் கோயிலுக்கே அதிகமான நிலத்தானங்கள் வழங்கப்பட்டன (இராசு,செ:1994:xiv). மேற்படி அறக்கட்டளையானது கோயில் நிதி நிர்வாக மற்றும் பண்பாட்டுப் பின்னணியில் முக்கியமான பணியை ஆற்றியது எனக் கருதமுடிகின்றது. 'ஆண்டனுபவித்துக் கொண்டு தர்மம் நடத்தி….' எனக் குறிப்பிடப்படுகின்றபோதும் எவ்வாறான தர்மத்துக்காக வழங்கப்பட்டதென்பது செப்பேட்டில் இடம்பெறவில்லை ஆயினும் இவ்வாலயத்திற்கு சேதுபதி அரசியாகிய காதலி நாச்சியார் தானம் வழங்கி அக்கோயில் சிறப்புடன் செயற்படப் பங்களிப்புச் செய்தாரெனலாம்.

காதலி நாச்சியாரின் பிறிதொரு செப்பேடாகிய களத்தூர்ச் செப்பேடு, பிராமணருக்கு வழங்கப்பட்ட நிலத்தானத்திற்குரியதாகும் (செப்பேடு.இல.46). இச்செப்பேடு களத்தூர் என்ற ஊரின் பெயரால் குறிப்பிடப்படுகின்றது. கோயிலில் பூசை மற்றும் பிறபணிகளை மேற்கொண்ட பிராமணர்கள் அக்காலத்தில் ஆன்மீக ரீதியாக சமுதாயத்தை வழிப்படுத்தினார்கள். களப்பிரர் ஆட்சிக்காலத்தின்போது பிராமணர்களுக்குத் தானம் வழங்கியதை வேள்விக்குடிச் செப்பேடு வாயிலாக அறியமுடிகின்றது. சோழ ஆட்சியாளர்களும் பிராமணர்களுக்கெனச் சதுர்வேதி மங்கலங்களை ஏற்படுத்தியதுடன் இவ்வாறான தானங்களையும் கொடுத்தனர். அதனைப் போலவே சேதுபதி அரசியொருவர் இராமநாதபுரத்துப் பிராமணர்களுக்குத் தானம் வழங்கிய செய்தியைக் காதலி நாச்சியாரின் களத்தூர்ச் செப்பேடு அறியத்தருகின்றது. குமரண்டூர் வீரமநல்லூரில் வசித்த வெங்கடேஸ்வர ஐயரின் மகனாகிய சங்கரநாராயண ஐயர் என்பவருக்கும் அவர்களது அக்கிரகாரத்திற்கும் இராமேஸ்வரத்துக்கு அண்மையில் தனுஷ் கோஷ்டி கரையில் இருந்த நிலம் தானமாக வழங்கப்பட்டது (செப்பேடு.இல:46). இந்து சமயத்தில் ஆன்மீகப் பணியாற்றும் பிராமணர்கள் அரசிகளால் ஆதரிக்கப்பட்டமைக்கு இச் செப்பேடு சான்றாக அமைகின்றது.

மங்களேஸ்வரி நாச்சியாரின் நெடியமாணிக்கம் செப்பேடு குறிப்பிடும் நிலத்தானமானது தனது வளர்ப்பு மகளாகிய சேஷம்மா, சங்குமுகம் அகத்திய தீர்த்தத்தில் நிறுவிய சீனிவாசப் பெருமாள் கோயிலுக்கு அபிசேகம், பூசை, நெய்வேத்தியம் போன்ற பணிகளின் பொருட்டு வழங்கப்பட்டதாகும் (செப்பேடு.இல.101). நெடியமாணிக்கம் என்ற ஊரிலுள்ள கொடைக்குரிய நிலப்பகுதியில் விளையும் நெல்லின் அளவைக் கொண்டே தானம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பெருமாள் கோயிலுக்கு வழங்கப்பட்ட தானமாக இத்தானம் அமைவது குறிப்பிடத்தக்கது. இவற்றிலிருந்து சேதுபதி இராணிகள் இந்துப்பண்பாட்டின் வேர்களாக இருந்த கோயில்களுக்கும், இக்கோயில்களில் பணியாற்றும் பிராமணர்களுக்கும் நிலத்தானம்

வழங்கியதை மேற்படி செப்பேடுகளின் வாயிலாக அறியமுடிகின்றது, மேலும் வைணவ மற்றும் சைவ ஆலயங்கள் நாச்சியார்களின் ஆதரவைப் பெற்றிருந்ததை அவதானிக்கலாம்.

பொதுவாக தானமாக வழங்கப்படும் கிராமங்கள் எல்லை குறித்தே வழங்கப்படும். மேலைச்சீத்தைக் கிராமம் தானமாக வழங்கப்பட்டபோது அதன் எல்லைகளாக 'செம்பிய நாட்டில், மேற்கில் குவளஞ்சாத்தான் தெற்கில் நொச்சிப் பொருத்து, கிழக்கில் தெய்வச்ச நல்லூர், வடக்கில் கடம்பன் குடி, குடுவேலியையும்…' எல்லையாகக் கொண்ட கிராமமே தானமாக வழங்கப்பட்டது. நஞ்சை, புஞ்சை மாவடை, மரவடை, மேல்நோக்கிய மரம், கீழ்நோக்கிய கிணறு, அங்கிருந்த குடி, படை என்பனவும், பள்ளு, பறை எனப் பலவும் இத்தானத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவை யாவும் சர்வமானியமாக வழங்கப்பட்டுள்ளது (செப்பேடு.இல.41). களத்தூர் செப்பேட்டிலும் எல்லை வரையறை தான நிலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. கோயிலுக்கும் பிராமணருக்கும் ஒத்தவாறு தானம் வழங்கப்படாலும் மேலைச்சீத்தைச் செப்பேட்டில் வரி பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட கிராமத்துக்குரிய பலவிதமான வரிகளும் நீக்கப்பட்டிருந்தன. பள்வரி, பலவரி, மடத்துவரி, வேண்டுகோள், செம்புவிலை, காணிக்கை, வண்டில்மாடு, கொட்டிய எருது, சுரபிப்பசு, பெடிவிலாடம், நீராணிக்கம் போன்ற அனைத்து வரிகளும் நீக்கப்பட்டே வழங்கப்பட்டன. எவ்வாறாயினும் கோயில்களும் அங்கு பணியாற்றிய பிராமணர்களும் அரசிகளின் போஷிப்பைப் பெற்றிருந்தமை தெளிவாகின்றது.

### தானத்தின் நிலைபேறும் பாவ புண்ணியம் பற்றிய நம்பிக்கையும்

தானத்திற்குச் சேதம், அழிவு என்பன ஏற்படாதவாறு பாதுகாக்க வேண்டும் என்பதை விரும்புகின்ற தானகாரர், அதனை அழிக்காமல் பேணி வரவேண்டும் என்பதை வலியுறுத்துவதும் குறிப்பிடத்தக்கது. களத்தூர்ச் செப்பேட்டில் 'காராம் பசுவைக் கொன்ற பாவத்தை அனுபவிப்பான்' எனக் குறிப்பிடப்படுகின்றது. இராமநாபுரத்தை ஆண்ட ஆட்சியாளருக்கு முன்பு இவ்வாறான தானங்களை வழங்கியோர் கங்கை, காசி போன்ற புனித யாத்திரைத் தலங்ளைக் குறிப்பிடுகின்றனர். ஆனால் சேதுபதிகள் இராமநாதபுரத்தோடு தொடர்புடையவர்கள்: சேதுவை காக்கின்ற கடப்பாடுடையவர்கள். இதனால் காதலி நாச்சியாரின் மேலைச் சீத்தைச் செப்பேட்டின் ஓம்படைக் கிளவியில், இந்த தர்மத்துக்கு அகிதம் பண்ணியபேர் கெங்கையிலும் சேதுவிலும் காராம்பசுவையும் மாதா பிதாவையும் பிராமணரையும் துன்பத்திற்கு ஆளாக்கிய பாவத்தை பெறுவார்கள் என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர் (செப்பேடு.இல 41). காராம்பசுவும், மாதா, பிதா, பிராமணர் போன்றோரும் இந்துசமயப் பண்பாட்டில் முதன்மைப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இத்தகையவர்களைக் கொல்வது மகாபாதகமாக இந்து சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன. தானங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தவே இவ்வாறு கூறப்பட்டதெனலாம்.

தானம் வழங்கப்பட்டதன் நோக்கத்தை காலங்காலமாக நிலைநிறுத்த விரும்பிய தானகாரர்கள் அதனைப் பேணி வருவதனால் ஏற்படும் புண்ணியத்தையும் எடுத்துரைக்கத் தவறவில்லை. இதன் பிரகாரம் முதற் செப்பேடு சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்த புண்ணியத்தையும் (செப்பேடு.இல:41), இரண்டாவது செப்பேடு கோடி சிவலிங்கப் பிரதிஷ்டை, கோடி பிரம்ம பிரதிஷ்டை செய்த புண்ணியத்தையும் (செப்பேடு.இல:46) பெறுவார்கள் என கூறுகின்றது. நெடியமாணிக்கம் செப்பேடு, காசி மற்றும் கங்கைக்கரை போன்ற இடங்களிலே சிவப்பிரதிஷ்டை, விஷ்ணுபிரதிஷ்டை அக்கிரகார பிரதிஷ்டை (பிராமணர் குடியிருப்புக்களை ஏற்படுத்தல்) செய்வதன் பலனை அடைவார்கள் எனக் குறிப்பிடுகின்றது (செப்பேடு.இல:101). சேதுபதிகளின் காலத்தில் கங்கையைப் போலவே சேதுவும் புனித இடமாகக் கருதப்பட்டதையும் அவதானிக்க முடிகின்றது. இந்துக்களின் பாவ புண்ணிய நம்பிக்கையை அடிப்படையாக் கொண்டு தாம் வழங்கிய தானத்தை நிலைபேறுடையதாக செய்யும் முயற்சியை சேதுநாச்சியார்களின் செப்பேடுகளிலிருந்து அறியலாம்.

**பெண்களின் நிலை**

கிழவன் சேதுபதியின் இரண்டாவது இராணியே காதலி நாச்சியார். இச்சேதுபதிக்கு நாற்பத்தேழு பெண்கள் மனைவியாக இருந்துள்ளனர். காதலி நாச்சியார் மேலைச் சீத்தைக் கிராமத்தை தானமாக வழங்கிய பின்பு கி.பி. 1710ஆம் ஆண்டு கிழவன் சேதுபதியின் ஏனைய மனைவிகளைப் போன்று தீப்பாய்ந்து இறந்தார் (இராசு,செ.,1994:227). இந்துசமயத்தில் காணப்பட்டிருந்த பெண்கள் தொடர்பான நடைமுறைகளில் கணவன் இறந்தபின் மனைவி தீப்பாய்ந்து உயிர்விடுவது வழக்கமாக இருந்துள்ளது. சில அறிஞர்கள் அரச குடும்பத்துப் பெண்களே இவ்வாறு உடன்கட்டை ஏறியதாகக் குறிப்பிடுவர். எவ்வாறாயினும் இந்தியாவில் 19ஆம் நூற்றாண்டிலும் இம்முறை இந்துக்களிடையே பெருமளவில் வழக்கில் இருந்தமையாலேயே இராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி போன்ற இந்து சமய சீர்திருத்தவாதிகள் அதனை நீக்குவதற்குப் பெருமுயற்சிகள் எடுத்திருந்தனர். 17ஆம், 18ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் சேதுபதி அரசமரபிலும் தீப்பாய்ந்து உடன்கட்டை ஏறும் நடைமுறைகள் வழக்கிலிருந்தமையை நாச்சியார்கள் தீப்பாய்ந்த நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன. இவர்கள் தொடர்ந்தும் சிலகாலம் உயிர் வாழ்ந்திருந்தால் இன்னும் பல இந்துசமயம் சார் பணிகளை மேற்கொண்டிருப்பர் என்பதில் ஐயமில்லை.

திருமணத்தின் பின் கணவனுக்கு தனித்துவமான மதிப்பினை இந்துப்பெண்கள் வழங்கிவந்துள்ளனர். சேதுபதி அரசிகளும் அதற்கு விதிவிலக்கல்ல. கணவன் இறந்தால் உடன்கட்டை ஏறுமளவுக்கு இப்பெண்கள் தமது கணவனை மதித்தனர். செப்பேட்டிலும் தம் கணவரை முதன்மைப்படுத்தி எழுதியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. 'ரெகுநாதத் தேவர் பத்தினியாகிய காதலி நாச்சியார் பண்ண ....தர்மத்துக்கு' என மேலைச் சீத்தைச்

செப்பேட்டில் குறிப்பிடப்படுகின்றது (செப்டே.இல:41). கணவரின் பெயரை முன்னிறுத்தித் தம்பெயர் குறித்தபோதும் தந்தையினதும் சகோதரனதும் பெயரை நிலைநாட்டும் வகையில் 'ரெகுநாத ஸேதுபதிகாத்த தேவரவர்கள் பத்நியான ராய தொண்டமானார் சகோதரியான காதலிநாச்சியாரவர்கள்….'எனக் களத்தூர் செப்பேட்டில் சுட்டப்படுகின்றது (செப்டே.இல:46). இந்துப் பண்பாட்டில் ஒரு பெண் தந்தை, சகோதரன், கணவன் என்ற உறவுமுறையின் மூலம் முன்னிறுத்தப்படும் நிலையை இக்குறிப்பு உணர்த்துகின்றது. காதலி என்பது இராமேஸ்வரத்தின் மூலவரின் அம்பாளின் பெயரை அடிப்படையாகக் கொண்டதாகும். பர்வதவர்த்தினி என்ற சமஸ்கிருதப் பெயரே தமிழில் மலைவளர் காதலி என்றும் அப்பெயரே காதலி என சுருக்கமாக வழங்கப்பட்டது எனவும் கூறப்படுகின்றது (கமால்,எஸ்.எம்.,2008:53). இதிலிருந்து இராமேஸ்வரத்துடன் கொண்டிருந்த தொடர்பையும் இந்துசமயப் பற்றினையும் அறிந்து கொள்ள முடிவதோடு, கடவுளரின் பெயரைச் சூடிக்கொள்ளும் வழக்காற்றினையும் கண்டுகொள்ளலாம்.

காதலி நாச்சியார் வழங்கிய களத்தூர் கிராமமானது அவருடைய பெயராலேயே வழங்கப்பட்டது. 'இரகுநாத காதலி ஆயிபுரம்' என அவ்வூர் அழைக்கப்பட்டது (இராசு,செ.,1994:228). இந்த ஊரின் 55 பாகம் பிராமணர்களுக்கு வழங்கப்பட்டது. ஒரு அரச குடும்பத்துப் பெண்ணனின் பெயரால் ஊர் அழைக்கப்பட்டமையானது அக்காலத்தில் அவர்களுக்கிருந்த மதிப்பை எடுத்துக் காட்டுவதாகக் கருதமுடிகின்றது. தற்போதும் இப்பெயர் வழக்கிலிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் சேதுபதிகள் வழக்கப்படி செப்பேடுகளை வழங்கியவர்களின் கையெழுத்து இடப்படுவதை அவதானிக்கலாம். மேற்படி அரசகுடும்பத்துப் பெண்கள் தானங்களை வழங்கிய போதும் அவர்களில் மங்களேஸ்வரியின் கையெழுத்து மட்டுமே கிடைக்கப்பெறுகின்றது. இவர் கி.பி.1803 முதல் கி.பி.1812 வரை சேதுநாட்டின் முதலாவது ஜமீன்தாரிணியாக இருந்தார் (கமால்.,1994:79). இதனாலேயே அவர் தாம் வழங்கிய நெடியமாணிக்கம் செப்பேட்டில் ராணி சேதுபதி எனக் கையெழுத்திட்டுள்ளார் (செப்பேடு.இல:101). செப்பேட்டில் இவர் 'முத்துவிசைய ரெகுனாதராணி சேதுபதி மங்களேஸ்வரி நாச்சியார்' எனக் குறிப்பிடப்படுகின்றார். இவர் சீனிவாசப் பெருமாள் கோயிலைப் பராமரிப்பதற்காக நெடிய மாணிக்கம் என்ற ஊரை வழங்கியதுமன்றிப் போகலூரை அண்மித்து அன்னசத்திரமொன்றை நிறுவியதையும் வேத விற்பன்னர்களுக்காக பல கிராமங்களை வழங்கியதையும் 96 தர்மாசனங்கள் என்ற சமஸ்தானத்தினுடைய ஆவணங்கள் தெரிவிக்கின்றன (கமால்,எஸ்.எம்.,1992:93). எனவே சேதுநாட்டு அரச பெண்கள் தானங்களை வழங்குமளவுக்குப் பொருளாதார ரீதியான சுகந்திரத்தையும், அரச அதிகாரத்தையும், இந்துப் பண்பாடைப் பேணிக்காக்கும் பொறுப்பையும் கொண்டவர்களாக விளங்கினர் என்பதைக் கண்டுகொள்ளலாம்.

## செப்பேட்டுக் கோட்டுரு

செப்பேடுகளில் அதனை வழங்கும் ஆட்சியாளருடைய சின்னங்கள் பொறிக்கப்படுவது மரபு. ஆனால் இக்கால செப்பேடுகளில் எக்கோயிலுக்குத் தானம் வழங்கப்படுகின்றதோ அக்கோயிலுக்குரிய தெய்வத்தின் சின்னங்கள் கோட்டுருவங்களாகப் பொறிக்கப்படுவது சிறப்பியல்பாகும். ஆயினும் நாச்சிமாரின் செப்பேடுகளைப் பொறுத்தவரை காதலி நாச்சியாரின் செப்பேடுகளில் இச்சின்னங்கள் இடம்பெறாதநிலையில் மங்களேஸ்வரி நாச்சியாரின் செப்பேட்டில் மட்டுமே இப்பண்பினை அவதானிக்கலாம். இச் செப்பேட்டில் அதன் துவாரத்தின் அருகில் சங்கு, சக்கரம், நாமம் ஆகியன வரையப்பட்டுள்ளன. எனவே இத்தானம் பெருமாள் கோயிலுக்குரியதென்பதை செப்பேட்டின் வெளிப்புறத்தைப் பார்த்தே குறிப்பிடமுடியும். நெடியமாணிக்கம் செப்பேடு பெருமாள் கோயிலுக்குரியதென்பதை செப்பேட்டில் வரும் வேறும் சில குறிப்புக்களும் எடுத்துக்காட்டுகின்றன.

### காலக்கணிப்பு

இந்து சமயத்தவர்கள் எந்த விடயத்தையும் கால நேரம் பார்த்தே செய்வது வழக்கம். அவ்வகையில் நாச்சிமாரின் செப்பேடுகளில் தானம் வழங்கப்பட்ட காலம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இந்துப் பஞ்சாங்கத்தில் சகாப்தம், வருஷம், திதி, மாதம், பட்ஷம் என்பன பிரதான இடத்தைப் பெறுகின்றன. காதலி நாச்சியாரின் மேலச்சீத்தைச் செப்பேட்டில் சாலிவாகன சகாப்தம், ஸ்ரீமுக வருஷம், உத்தராயணம், ஏமந்த ருது, தைமாதம், கிருஷ்ண பட்சம், அமாவாசை போன்ற விபரங்களுடன் கிழமை, நட்சத்திரம் போன்றனவும் தரப்பட்டுள்ளன. அதில் சிறப்பாக அவதானிக்கக் கூடிய அம்சம் யாதெனில் அமாவாசையில் இத்தானம் வழங்கப்பட்டுள்ளமையாகும். களத்தூர் செப்பேடும் அமாவாசை தினத்திலேயே வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக இந்துக்கள் பிதிர் அல்லது இறந்தோர் தொடர்பாகச் செய்யும் காரியங்களை அமாவாசையிலேயே மேற்கொள்வர். இவற்றை நோக்குமிடத்து அத்தானங்கள் இறந்தவர் தொடர்பாக வழங்கப்பட்டுப் பொறிக்கப்பட்டவை என்பது புலனாகும். காதலி நாச்சியார் தனது கணவனாகிய கிழவன் சேதுபதி இறந்த பின்னர் அவரது நினைவாக இத்தானங்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்துக்கள் இறந்தவர் தொடர்பான நினைவுகூருதலை செய்வது அமாவாசையிலாகும். அப்பின்னணியில் இந்துசமயப் பண்பாட்டு அம்சத்தை இச்செப்பேட்டில் அவதானிக்கலாம்.

### முடிவுகளும் பரிந்துரைகளும்

சேதுபதி ஆட்சியாளர்கள் இந்து சமயத்தின் புரவலராக இருந்ததுடன் பிற சமயங்களையும் ஆதரித்திருந்தனர். அவர்கள் வழியில் அவர்களது இராணிகள் வழங்கிய தானங்கள் இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் முக்கியமான பங்களிப்பினை வழங்கியிருந்ததை அவதானிக்கலாம். சிவன் மற்றும் பெருமாள் கோயில்களுக்கும், பிராமணர்களுக்கும்

தானங்களை வழங்குதல், அவற்றை பாதுகாத்தல் மற்றும் நிலைநிறுத்துதல் இந்துக்களுக்கு உரித்தான தினங்களைக் கடைப்பிடித்தல், நாள், நட்சத்திரம் என்பவற்றைப் பின்பற்றுதல் போன்ற இந்துப் பண்பாடு சார்ந்த விடயங்களை மேலைச்சீத்தைச் செப்பேடு, களத்தூர்ச் செப்பேடு மற்றும் நெடிய மாணிக்கம் செப்பேடு ஆகியவற்றின் வாயிலாக கண்டுகெள்ள முடிகின்றது. அரச பெண்கள் சமய வாழ்வைப் பின்பற்றுவதிலும், தானங்களை வழங்குதிலும் சுகந்திரமாகச் செயற்பட்டமைமையை இச்செப்பேடுகள் புலப்படுத்துகின்றன எனக் கூறலாம். மேலும் தமிழ்நாட்டின் ஏனைய அரச வம்சப் பெண்களைப் போல சேதுபதி அரச குடும்பப் பெண்களும் இந்துசமயப்பணியில் ஈடுபட்டிருந்தமையும் காணமுடிகின்றது. பொதுவாக மேற்படி செப்பேடுகள் உள்ளிட்ட சேதுபதிகளின் செப்பேடுகளுக்கு தெளிவான விளக்கவுரை எழுதப்படுமாயின் அக்காலம் பற்றிய பல வரலாற்றுச் செய்திகளை அறிந்து கொள்ள வாய்ப்பேற்படும் என்பதில் சந்தேகமில்லை.

## உரு.1 மேலச்சீத்தைச் செப்பேடு

### செப்பேடு

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1615 இதன்மேல் செல்லாநின்ற

2 ஸ்ரீமுக வருஷம் உத்திராயணத்து ஏமந்த ருதுவில் தை மாதம் கிருஷ்ண பட்சத்தில்

3 அமாவாசையும் திங்கட்கிழமையும் திருவோண நட்சத்திரமும் யித் யாதி யோகமும்

4 சககனி கரணமும் இப்படிக்கொத்த சுபதினமான மகோதய புண்ணிய காலத்தில் தேவை

5 நகராதிபன் சேதுமூலரட்சா துரந்தரன் வீரதண்டை

6 சேமத்தலை விளங்கிய தாளினான் சிவபூஜா துரந்தரன் சேதுகாவலன் வங்கிஷாபதியான

7 துகவூர் கூத்தம் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் விரையாத கண்டனிலிருக்கும்

8 இரண்ய கெர்ப்பயாஜி ரெகுநாத தேவர் புத்திரன் ரெகுநாத தேவர் பத்தினியாகிய

9 காதலிநாச்சியார் பண்ணின தன்மம் ராமேசுவரத்தில் ராமநாதசுவாமி அறக்கட்டளைக்

10 குத் தான சாசன பட்டையம் குடுத்தபடி இந்த தர்மத்திற்கு விட்ட கிராமமாவது

11 செம்பிய நாட்டில் குவளஞ்சாத்தானுக்குக் கிழக்கு நொச்சிப் பொருத் துக்கு வடக்கு

12 கிழக்கு தெய்வச்சநல்லூர் காலுக்கும் மேற்கு கடம்பன்குடிக்கும் குடவேலிக்கும்

13 தெற்கு இன்னான்கு எல்கைக்குட்பட்ட மேலச்சீத்தையும் அது உண்டாகிய நஞ்சை புஞ்சை

14 மாவடை மரவடை மேல்நோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறும் குடி படை

15 பள்ளு பறை சகலமும் சர்வமானியாக இராமநாத பண்டாரம் பாரிச மாக கட்டளை

16 யிட்டபடியினாலே சந்திராதித்த காலம் வரையிலும் ஆண்டனுபவித்துக் கொண்டு தர்மம் நடத்தி

17 வரக்கடவோமாகவும் இந்த தர்மம் யாதாமொருத்தர் பரிபாலனம் பண்ணினபேர்

18 சிவலிங்கப் பிரதிட்டை பண்ணின தர்மத்தை அடைவாராகவும் இந்த தர்மத்திற்கு

19 அகிதம் பண்ணினபேர் கெங்கையிலும் சேதுவிலும் காராம் பசுவையும்

20 மாதா பிதாவையும் பிராமணரையும் வதை பண்ணின தோஷத்திலே போகக் கடவாராகவும்

21 இப்படி சம்மதித்து ரெகுநாதத் தேவர் பத்தினியாகிய காதலிநாச்சி யார் பண்ணின

22 தர்மத்துக்கு தான சாசனப் பட்டயம் கொடுத்தோம் ராமலிங்கம் துணை

## உரு.2 களத்தூர்ச் செப்பேடு

**செப்பேடு**

**முதல் பக்கம்**

ஸ்ரீ ஸுபமஸ்து

1 ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1631 இதில்ச் செல்லாநின்ற விரோ
2 தி நாம ஸம்வத்ஸரத்தில் தெக்ஷிணாயநத்தில் ஸரம ரிதுவில் காத்திகை மீ'ல் கிர்ஷ்ண
3 பட்சத்தில் அமாவாஸையும் ஆதித்யவாரமும் அநுராயர் நட்சத்திரமும் ப்ரிதிநாம யோக
4 மும் நாகவாகரணமும் ஸுபபோக ஸுபகரணமும் கூடிய புண்ணிய திநத்தில் தே
5 வை நகராதிபந் ஸேதுமூல ரட்சா துரந்தரந் ராமநாதஸ்வாமி கார்யா துரந்தரன்
6 ராமநாத ஸ்வாமி காரிய துரந்தரந் ஸிவபூஜா துரந்தரந் பரராஜ சேகரன்
7 பரராஜ கஜ ஸிம்ஹம் ரவிகுலசேகரந் ரவி மாத்தாண்டன் சொரி முத்து வன்

230

8 னியன் ஸ்வஸ்திஸ்ரீமந் மகாமண்டலேஸ்வரந் அரியராய தளவிபாடன் பாஷை
9 க்குத் தப்புவார் கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதா
10 ன் பட்டமானங் காத்தான் துட்டராயிர கண்டன் புவநேக வீரன் வீரகஞ்சுகன் வீரவள
11 நாடன் வீரவெண்பாமாலை இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் துரை
12 ராயன் ஆத்திற்ப்பாச்சி கடலில்ப்பாச்சி மதப்புலி அடைக்கலங் காத் தான் தாலிக்கு
13 வேலி சத்திருவாதியன் மிண்டன் வன்னியராட்டந் தழைத்தான் மேவலர்கள் கோளரி
14 மேவலர்கள் வணங்குமிரு தாளினான் வீரமஹா கெம்பீரன் கீற்திப் பிரதாபந் ஆரியம
15 ாநங்காத்தான் தொண்டியந்துறை காவலன் துர்க ரேபந்தன் அனும கேதநன் பரதள
16 விபாடன் குடைக்குக் கர்ன்னன் பரிக்கு நகுலன் அரசராவண ராமன் அடியார் வேளைக்கா
17 றன் உரிகோல் சுரதாநன் அந்தம்பிர கண்டன் மூவராயிர கண்டன் சாடிக்காறர் கண்ட
18 ன் ஸ்வாமித்துரோகியள் மிண்டன் பஞ்சவன்ன ராயராவுத்தன் பனு க்குவார் கண்டன் இ
19 வுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு குடாதா
20 ன் பாண்டிமண்டல ஸ்தாபனாசாரியன் சோழமண்டலப் பிறதிட்டா பனாசாரிய
21 ன் பூர்வ தெட்சண பச்சிம உத்திர சப்த ஸமுத்திராபதி ஈளமுங் கொங்கும் யாட்பாண
22 பட்டணமும் கெசவேட்டை யாடியருளிய ராசாதிராசன் ராசபர மேஸ்வரந் நவகோடி
23 நாராயணன் நவகண்ட சக்ரவத்தி மலை கலங்கிலும் மனங்கலங்காத கண்டன் கொட்ட

 இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

24 மடக்கி வைய்யாளி நாராயணன் காவிக்குடையான் பரதநாட...
பிரவீணன் கருணா க

25 டாட்சன் காமிநி கந்தற்பன் சத்யாபாஷா ஹரிச்சந்திரன் சங்கீத
சாகித்ய வித்யா விநோதந்

இரண்டாம் பக்கம்

26 வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளிநான் ஸத்ரஜனா ஸேதுகா

27 வலன் வம்சாதிபநான துகவூர்க் கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்க
சோழநல்லூர் கீழ்ப்ப

23 ால் விரையாத கண்டனில் இருக்கும் ஸ்ரீஹிரண்ய கர்ப்பயாஜி ரெகு
நாத ஸேதுபதி காத்த தேவரவ

29 ர்கள் புத்ரன் ஸ்ரீஹிரண்ய கர்ப்பயாஜி ரெகுநாத ஸேதுபதி காத்த
தேவரவர்கள் பத்நியா

30 ன ராய தொண்டமானார் புத்ரி ரெகுநாத ராய தொண்டைமானார்
சஹோதரியரான கா

31 தலி நாச்சியாரவர்கள் நானா கோத்ரத்தில் நானா சூத்ரத்தில் நானா
ஸாகாத்யாயியா

32 ளான ஷந்யமருஷ்ண கோத்ரத்தில் ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் யஜுஸ்
ஸாகாத்யாயியா

33 ன குமரண்டூர் வீரம நல்லூரில் இருக்கும் வெங்கடேஸ்வரய்யன்
புத்ரந் ஸங்கரந

34 ாராயணய்யன் முதலாகிய பிராமணருக்கு ராமீஸ்வரத்தில் தநுஷ்
கோடிக்கை

35 ரயில் அக்ரஹாரத்துக்கு ஸ்ங்கரநாராயணய்யன் கய்யில் ஸஹிரண்யோ
தக தா

36 ரா பூர்வமாக ப்ரமாநம் பண்ணிக் கொடுத்தோம் கிராமமாவது தேர்
போகி நாட்டி

37 ல் களத்தூருக்கு எல்கையாவது கிள்ளிகுடி கண்வாய்க்கு மேற்கு
தேர்போகியி

232

38 ல்த் தேனாற்றுக்கு வடக்கு கொட்டகுடி வயலுக்கு கிழக்கு திருத்தங்
கூர் பாம்பாற்றுக்குத் தெ

39 ற்கு இந்தப் பெருநான்கெல்கைக்குள்பட்ட களத்தூருக்கு ப்ரதி நாம
மான ரெகுநாத

40 காதலி ஆயிபுரம் கணஸ்கைத்யபாகம் 55 இந்த பாகம் இதிலுள்ள
நஞ்சை புஞ்சை திட்டுத் திட

41 ல் மாவடை மறவடை கீழ்நோக்கிய கிணறு மேல்நோக்கிய மரம் குள
குட்டம் ஏந்தல் பிறவடை

42 பாசிபடுகை ஆவிரை கொழிஞ்சி தேன்படு பொர்தும்பு றணி உடைப்பு
மீன்படு பள்ளம்

43 குரப்பிணி குளிப்பு இதிலுள்ள பள்வரிப் பலவரி மடத்துவரி வேண்டு
கோல் செம்புவிலை

44 காணிக்கை வண்டில்மாடு கொட்டியளருது சுரவிப்பசு பெடி விலாடம்
நீராணி

45 க்கம் யிதிலுண்டான சகலவரியும் தங்களுக்கு ஸர்வ மாந்யமாகக்
கட்டளை இட்டபடியி

46 னாலே யிதிலுள்ள நிதி நிக்ஷேப ஜல தரு பாஷாணாக்ஷியாகாம்ய
ஸித்த ஸாத்யமென்

47 று சொல்லப்பட்ட அஷ்டபோக தேஜ ஸ்வாமியங்களும் சந்திரார்க்கஸ்
தாயியாக புத்ர பௌத்ர பா

48 ரம்பர்யமாக தாநாதி விநிமய விக்ரயங்களுக்கும் யோக்யமாக
ஆண்டனுபவித்து தர

49 க்கடவாராகவும் இந்த தம்மத்தைப் பரிபாலநம் பண்ணினபேர் கோடி
சிவலிங்

50 க பிரதிஷ்டையும் கோடி பிரம்ம பிரதிஷ்டையும் பண்ணின ஸுகத்
தையடைவாராகவும்

51 இந்த அக்ரஹாரத்துக்கு யாதாமொருவன் துரோகம் பண்ணினவன்
கெங்கைக் கரையி

52 லே காராம் பசுவைக் கொன்ற பாவத்திலே போவானாகவும்

## உரு.3 நெடியமாணிக்கம் செப்பேடு

### செப்பேடு

முதல் பக்கம்

1 உசுவஸ்ஸ்ரீமன் சாலிவாகன சகாத்தம் 1727 கலியப்தம் 4906 இதின்மேல்

2 ச்செல்லாநின்ற குறோதன நாம சம்மச்சரத்தில் தெஷ்சணாயணத்தில்
சரரிதுவா

3 கிய காற்திகை மாதம் 4 உ ஆதித்தவாரனாள் அமரபட்சத்து ஏகா
தெசியும் அத்த

4 நட்செத்திரமும் பிறிதிநாமயோகமும் பாலவாகரணமும் கூடின சுப

5 யோக சுபதினத்தில் சுவஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுபரன் அரியர்த

6 ள விபாடன் பாசைக்குத் தப்புவராயிர கண்டன் மூவராயிரகண்டன்
கண்டநாடு கொ

7 ண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டிமண்டலத் தாபனாசாரியன்
சோளமண்ட

8 லப் பிறதிஷ்ட்டாபனாசாரியன் தொண்டமண்டலச் சண்டப்பிற
சண்டன் ஈளமும்

9 கொங்கும் யாட்ப்பானபட்டணமும் கெசவேட்டை கொண்டருளிய ராச

10 ாதிராசன் ராசபரமேஸ்வரன் ராசமாற்தாண்டன் ராசகெம்பீரன்
ராசகுலதிலகன்

11 உரிகோல் சுரதானன் அடியார் வேளைக்காறன் கோடிசூரியப்பிற
காசன் அ

12 ஷ்ட்ட லெட்சுமிவாசன் பூலோக தெய்வேந்திரன் வேதியர்காவலன் அ

13 ண்டக்கலம் காத்தவன் இரவிகுலசேகரன் சொரிமுத்துவன்னியன்
புவனேக

518

14 வீரன் சங்கீத சாயித்திய வித்தியா விநோதன் அந்தம்பிற கண்டன்
சாடிக்காறர் கண்

15 டன் சாமித்துரோகியள் முண்டன் அரசராவண ராமன் தாலிக்குவேலி
தண்டுவார்

16 முண்டன் சமையகோடாலி இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர்
சிங்கம்

17 ஆத்துப்பாச்சி கடலில்ப்பாச்சி இவுளிபாவடி மிதித்தேறுவார் கண்டன்

18 வைய்யாளி நாறாயணன் தொண்டியந்துறை காவலன் அனுமகேதனன்

19 கெருடகேதனன் சிங்க கேதனன் வியாக்கிறகேதனன் மயூரகேதனன்
மான்

20 கேதனன் துஷ்ட்டரில் துட்டன் துட்ட நெட்டூரன் சிட்டபரிபாலனன்
செங்காவி

21 க்குடையான் சேமத்தலை விளங்குமிரு தாளினான் திலதநுதல் மடவார்
கள் ம

22 டலெழுத வருசுமுகன் தனுக்கோடி காவலன் மதுரை மானங் காத்
தான் வலிய

23 ச்சருவி வளியில்க்கால் நீட்டி குடைக்கிக் கற்னன் பரிக்கி நகுலன்
வில்லுக்கு வி

24 சையன் சொல்லுக்கு அரிச்சந்திரன் மல்லுக்கு வீமன் அறிவுக்கு அகத்திய

25 ன் வைய்கை வளநாடன் செம்பிவளனாடன் தேவை நகராதிபன் சேது
மூல

26 ாதுரந்தரன் ராமனாதசுவாமி காரியாதுரந்தரன் துகவூர்க்கூத்தத்தில்
காத்தூ

27 ரான குலோத்துங்கசோள நல்லூருக்கு கீள்பால் விரையாத கண்டனிலி

28 ருக்கும் அசுபதி கெசபதி நரபதி சேநுபதியாகிய மகாராசா ராசஸ்ரீ
இரணி

29 யகெற்பயாசி ரவிகுல முத்துவிசைய ரெகுனாதசேதுபதி காத்ததேவரவ

30 ர்கள் வம்மிசோதாபகரான ஸ்ரீமது முத்து விசைய ரெகுனாத ராணி
சேதுபதி

31 மங்களேசுவரி நாச்சியாரவர்கள் ஸ்ரீமது முத்து விசைய ரெகுனாத

32 ச்சேதுபதி புத்திரியாகிய சேஷம்மா அவர்கள் சங்குமுகம் அகத்திய தீ

இரண்டாம் பக்கம்

33 ர்தத்தில் பிறதிஷ்ட்டை செய்து வைய்த்த சீனிவாசகப்பெருமாள் கோ

34 வில் அபிசேகம் பூசை நெய்வேதனத்துக்கு தானபூறுவ சாதனமாக வி

35 ட்டுக்குடுத்த கிறாமம் காமங்கோட்டைத்தாலுகா புத்தூர் மகாணத்தில் புத்தூர்

36 எல்கைக்கித் தெற்கு வளனாட்டு எல்கைக்கி வடக்கு உளையூர் எல்கைக்கு கிளக்கு

37 சேமனூர் எல்கைக்கி மேற்கு இன்னான்கெல்கைக்குள்பட்ட நெடிய

38 மாணிக்கம் கிறாமம் ஒன்னுக்கு குளப்பிறமாணம் நஞ்சை விரையடி 54 கலம்

39 மாவிடை மரவிடை திட்டுத்திடல்

40 கீள்னோக்கிய கிணறு மேல்னோக்கிய மரம் பாசி படுகை நிதிநிட்சேப செல

41 தருபாஷாணாச்சண்ணியாகாமியமென்று சொல்லப்பட்ட அஷ்ட்ட போக தேச

42 சுவாமியங்களும் ஆதிசந்திராற்கசந்திரப்பிறவேசமுள்ள வரைக்கும் கல்லு

43 ம் காவேரியும் புல்லும் பூமியுள்ள வரைக்கும் ஆண்டனுபவித்துக் கொள்ளக்கடவா

44 ராசவும் அந்தக் கிறாமத்தில் வரப்பட்ட சகல ஊதியத்தையும் சங்குமுகம் அகத்திய தீ

45 ர்த்தம் சீனிவாசகப்பெருமாள் கோவில்ப் பூசைநெய்வேதினம் தான் வில்லா

46 மல் நடப்பிவிச்சுக்கொள்ளக் கடவாராகவும் இந்ததற்மத்தை யாதாமொருதர் புறோ

47 விற்தி பன்னுகிறார்களோ அவர்களுக்கு காசியிலே கெங்கைக்கரையிலேயும்

520

48 புண்ணிய சேத்திரங்களிலேயும் அனேகச் சிவபிரதிஷ்ட்டையளும் விஷ்னு

49 ப்பிறதிஷ்ட்டையளும் அனேகம் அக்கிறாகாரப் பிறதிஷ்ட்டையும் பன்னி

50 விச்சபலனை அடைவார்களாகவும் யிதற்கு அகிதம் நினைக்கப்பட்டபேற்கள் கெ

51 ங்கைக்கரையிலே அனேகம் கோவதை மாதுருவதைபன்னின தோசத்தை

52 யடைவாராகவும் சுதத்தாதி குணம் புண்ணியம் பரதத்தானுபாலனம் பரதத்தாபகா

53 ரெனா சுதத்தம் நிற்பலம் பவேது: தானபாலன யோர்மற்றே தானாசிரெயோ

54 ன பாலனம் தானா சுவற்க மவாப்புனோதி பாலனா தச்சுதம்;பதம் இந்தச்சா

55 தனப்பட்டையம் யெளுதினேன் திருஉத்தரகோச

56 மங்கை திருப்புல்லாணி அகத்திய தீற்த்தம் சிப்

57 பம் வீரப்பாசாரி மகன் ராமசாமி லிகிதம்

உ ராணி சேதுபதி

(மூலம் இராசு.செ., சேதுபதிகள் செப்பேடுகள்)

## உசாத்துணை


இராசு.செ., (1994), சேதுபதிகள் செப்பேடுகள், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, சிதம்பரம்.

கமால்.எஸ்.எம்., (1992), சேதுபதி மன்னர் செப்பேடுகள், ஷர்மிளா பதிப்பகம், இராமநாதபுரம்.

சண்முகசுந்தரம்.,காவ்யா.(தொகு.). (2008), எஸ்.எம். கமாலின் சேதுபதிகள் சரித்திரம், காவ்யா வெளியீடு, சென்னை.

இராமசாமி.அ. (2009), நாயக்கர் காலம் வரலாறும் இலக்கியமும், உயிர்மை பதிப்பகம், சென்னை.

பத்மநாதன்.சி, இரகுபரன்.க, பிரசாந்தன்.ஸ்ரீ. (பதி.), (2010), விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும். இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம். இலங்கை.